10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 186 ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 26 2017 ...300 48 48



## தலைவரின் இல்லத்தில் பிறந்ததின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ.26

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வசித்த இடத்தில் பிறந்தநாள் நிகழ்வுகள் இன்று மு.ப.10 மணிக்கு இடம்பெறும் என வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தபோது, "தலைவர் பிரபாகரனின் 63 ஆவது பிறந்தநாளை

06



# பிரபாகரன் பிறந்தநாள்

## தாயகத்தில் கொண்டாட்டம் சுவரொட்டிகளால் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 63 ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

இதையொட்டி தமிழர் தாயகத்தின் பெரும்பாலான பகுதிகளில் தலைவர் பிரபாகரனின் படங்களுடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. வெள்ளிக்கிழமை இரவு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டு சுவரொட்டிகளைத் தேடி அகற்றும் பணி நேற்றுக் காலை முழுவதும் மும்முரமாக இடம்பெற்றது.

இதேவேளை, இன்றையதினம் தலைவரின் பிறந்ததினத்தைக் கொண்டாட தமிழர் தாயகம் எங்கும் ஏற்பாடுகள்

06

## முன்னாள் போராளிகள் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம், நவ.26

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த தீருவில் குமரப்பா - புலேந்திரன் நினைவுச் சதுக்கத்துக்கு வருமாறு ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்த முன்னாள் போராளிகள் மூவர் கைது செய்யப்பட்டனர்.


எனினும் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தலையீட்டால் சில மணி நேரங்களிலேயே விடுவிக்கப்பட்டனர்.

மாவீரர் நாள் நிகழ்வுகள் நாளை வல்வெட்டித்துறை தீருவில் குமரப்பா - புலேந்திரன் நினைவு சதுக்கத்தில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளு

06

## ஜனநாயக விரோத செயலுக்கு த.தே. கூட்டமைப்பும் உடந்தை

### சாடுகிறார் குமார் குணரத்னம்



ஹட்டன், நவ.26

உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைக்கும் ஜனநாயக விரோத செயலுக்குத் தமிழ் தேசிய கூட்டமைப்பு உடந்தையாக உள்ளது என முன்னிலை சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்னம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அட்டனில் நேற்று இடம்பெற்ற கட்சிக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான உண்மை

06

# 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக் கோர முடிவு

கொழும்பு, நவ. 26

93 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கோர தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு அண்மையில் நீதிமன்று இடைக்காலத் தடை பிறப்பித்தது.

இதனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணைக்குழு நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

இதன்போது 93 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கோருவது என முடிவு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி நாளையில் இருந்து இரு வாரங்கள் கழித்து வேட்பு மனுக்கள் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் 40 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக் கோரல் பற்றிய அறிவிப்பு வரும் 29ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)



## தமிழீழம் வரைபட பேரணியால் கொழும்பில் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ.26

தமிழீழம் பொறிக்கப்பட்ட ரீ சேர்ட் அணிந்து நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பேரணியால் நேற்று கொழும்பில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தப் பேரணியை உதய கம்மன்பிலவை தலைமையாகவும் மகிந்த அணியின் பங்காளிக் கட்சியாகவும் உள்ள

06

## ஆவா முஸ்லிமை விடுவிக்க அரசியல்வாதிகள் களத்தில்!

யாழ்ப்பாணம், நவ.26

பொலிஸார் கைது செய்த ஆவா குழு உறுப்பினரான முஸ்லிம் இளைஞரை விடுவிக்க உயர் மட்ட அரசியல்வாதிகள் சிலர் முயல்கின்றனர் என தேசிய ஊடகம் ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

உயர் பொலிஸ் அதிகாரிகள் ஊடாகவே இம்முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. இது பற்றி அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

06




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வேலையில்லாதோர் வடக்கில் 40, 493 பேர்

யாழ்ப்பாணம், நவ.26

வடக்கு மாகாணத்தில் தற்போது 40 ஆயிரத்து 493 பேர் வேலை வாய்ப்புக்கோரி மாவட்டச் செயலகங்களில் பதிவினை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் 5 மாவட்டத்திலும் வேலை வாய்ப்பின்றி உள்ள இளைஞர்களில் குறிப்பிட்டளவானோரே மாவட்டச் செயலகங்களில் தமது பதிவினை மேற்கொண்டுள்ள நிலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையை எட்டியுள்ளது.

இதன் பிரகாரம் அதி உச்சமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 ஆயிரத்து 632 பேரும் , வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 840 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 635 பேரும் , மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 282 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 94 பேரும் வேலை வாய்ப்புக்கோரி மாவட்டச் செயலகங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு குறித்த எண்ணிக்கையானோர் வேலை வாய்ப்புக்கோரி பதிவுகளை மேற்கொண்டிருந்த போதிலும் , இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதும் பலர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 2020இல் இலங்கையின் முதலாவது செயற்கைக்கோள்



கொழும்பு, நவ.26

சேர் ஆதர் சீ கிளார்க் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் முதலாவது செயற்கைக் கோள் 2020 ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

நனோ தொழில்நுட்பத்துடனான இந்த செயற்கைக் கோள் தயாரிப்புப் பணிக்கான தொழில்நுட்பம் மற்றும் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக ரஷ்யாவுடன் இலங்கை உடன்படிக்கையொன்றை செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதுவரை இலங்கை விண்வெளித்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் எதனையும் செய்யவில்லை. இந்தநிலையில் 2020 இல் செயற்கைக் கோளை ஏவுவதோடு, இலங்கையின் விண்வெளி யுகம் ஆரம்பமாகும் என ஆதர் சீ கிளார்க் மையம் அறிவித்துள்ளது. (அ)

# சைக்கிள் திருடர் சிக்கினர் நேற்று



யாழ்ப்பாணம் , நவ. 26

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக நிறுத்தப்படும் சைக்கிள்களைக் களவாடினர் என்ற சந்தேகத்தில் நான்கு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

போதனா வைத்தியசாலைக்கு முன்பாக விடப்படும் சைக்கிள்கள் தொடர்ந்து ஒரு கும்பலால் திருடப்பட்டு வந்தன.

இந்நிலையில் சைக்கிளொன்றைத் திருட முற்பட்ட இருவரை அங்கு நின்றவர்கள் நேற்றுக் கையும் மெய்யுமாகப் பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்தச் சம்பவம் நடைபெற்று சில மணிநேரத்தில் வேறு இருவர் போதனா வைத்தியசாலை முன்பாக நிறுத்தப்பட்டு இருந்த இன்னொரு சைக்கிளைத் திருட முற்பட்டவேளை அங்கு நின்ற வாடகைக் கார் சாரதிகள் அதனை அவதானித்தனர். அவர்கள் திருடர்களைத் துரத்திச் சென்று பிடித்து, அவர்களையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர்கள் நான்கு பேரையும் தாம் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# வித்யாவின் பிறந்தநாளில் மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், நவ.26

கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்யாவின் 21ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். இராணுவக் கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வித்யாவின் தாயார் சிவலோகநாதன் சரஸ்வதி பங்கேற்று மாணவர்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கிவைத்தார். (அ)

# ஆஸி.க்குப் போனார் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, நவ.27

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அவுஸ்திரேலியாவில் இடம்பெறும் பொலிஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக அங்கு பயணமாகியுள்ளார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த மாநாட்டை முடித்துக் கொண்டு அவர், எதிர்வரும் 2 ஆம் திகதியன்று நாட்டுக்குத் திரும்புவார்.

அதுவரையிலும், சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சீ.டீ விக்ரமரத்ன பதில் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றுவார் எனப் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# குட்டித் தேர்தல் யாழில் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணம் சிந்தனைக்கூடம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் முறைகள் தொடர்பான விசேட கருத்தரங்கொன்று நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

சிந்தனைக் கூடப் பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள், வேட்பாளர்களுக்கான விதிமுறைகள், வாக்காளர்களுக்கான வழிகாட்டல்கள் எனும் தலைப்புக்களில் யாழ். மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன் விசேட கருத்துரை நிகழ்த்தினார்.

கருத்துரையினைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது. திறந்த கலந்துரையாடலின் போது உள்ளூராட்சித் தேர்தல் முறைகள் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு யாழ். மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெளிவான விளக்கமளித்தார்.

இந்தக் கருத்தரங்கில் வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் ஆர்.வரதராஜப்பெருமாள், முன்னாள் வட மாகாண சபை வேட்பாளர் மு.தம்பிராஜா உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# வவுனியா பஸ் புத்தளத்தில் விபத்து

வவுனியா, நவ.26

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளுடன் சென்ற தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் அதில் பயணித்த சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

புத்தளம் தில்லையடி லாஸா உணவகத்துக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ், முன்னால் சென்ற ஒரு பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட போதே, குறித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்தது. இதன்போது அந்தப்பகுதியில் இருந்த உணவகத்தின் முன்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றுடன் மோதி, குடைசாய்ந்தது. இதன்போது, பஸ்ஸில் இருந்த பயணிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். (அ)

# ஏ.ரி.எம் திருடர்களுக்கு பொலிஸ் வலை வீச்சு

கொழும்பு, நவ.26

ஏ.ரி.எம். இயந்திரங்களில் தரவுகளைக் கொள்ளையிட்டு போலி வங்கி அட்டைகள் மூலம் பணத்தை எடுக்கும் இரண்டு நபர்களைத் தேடி பொலிஸார் வலைவீசியுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் சுமார் 30 லட்சம் பணத்தை இவ்வாறு கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குறித்த தகவல் அறிந்தால் அது குறித்து 011-2326670, 011-2320141 மற்றும் 011-2320145 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தச் சந்தேக நபர் பணத்தை கொள்ளையிடும் காட்சிகள் இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் அக்குரணை பிரதேசங்களில் உள்ள பணம் மீளப்பெறும் இயந்திரங்கள் அமைந்துள்ள இடத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 26 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

## வராத தலைவன்

அண்மையில் வெளியான, மெர்சல் படத்தில் "ஒரு தலைவன் உருவாக ஒரு யுகமே தேவை" என்றொரு வசனம் வரும். ஆனால் யுகங்கள் பல கடந்தாலும் சில தலைவர்களைப் போல இன்னொரு தலைவர் உருவாகாமலும் போய்விடுவதுமுண்டு.

கடந்த காலங்களில் பல தலைவர்கள் உருவானார்கள், ஆட்சி செய்தார்கள். ஆனால் மக்கள் மனங்களில் உயர்வான இடத்தைப் பிடித்தவர்கள் சிலரே. அப்படியான தலைவர்கள் இந்த நூற்றாண்டிலும் உருவானார்கள். சே குவேரா, பிடல் கஸ்ரோ, நெல்சன் மண்டேலா என நீளும் பட்டியல் அந்தந்த நாடுகளின் மக்களின் மனங்களில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் – அடக்குமுறைக்கு உள்ளாகும் நாடுகளின் மக்களின் மனங்களிலும் இடம்பிடித்தவர்கள்.

இந்தத் தலைவர்களின் வரிசையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நிலையான இடம்– முதலிடம் உண்டு. தலைவர் பிரபாகரன் போன்றவர்கள் இந்த நூற்றாண்டில் – யுகத்தில் மட்டுமல்ல. எத்தனை யுகங்கள் தோன்றினாலும் உருவாகப் போவதில்லை. கடந்த காலங்களில் – இந்த நூற்றாண்டில் உருவான தலைவர்கள் எல்லோரும் அரசாங்கத்தின் தலைமைகளாக – ஏற்கனவே உருவாக்கப்பட்ட நாட்டை கட்டமைக்க உழைத்தவர்கள். சுதந்திர வீரர்களாக வலம் வந்தபோது அவர்களால் தங்கள் நாட்டுக்கான கட்டமைப்பையோ, தங்கள் இராணுவத்துக்கான கட்டமைப்பையோ உருவாக்க முயலவில்லை – முடியவில்லை.

வெறுமனே ஒரு பிஸ்டலுடன் ஆரம்பித்த போராட்டம் முப்படைகளாக விரிவடையச் செய்ததுடன் அதன் கீழ் பல படையணிக் கட்டமைப்புகளை உருவாக்கியதுடன் மட்டும் தலைவர் பிரபாகரன் நின்றுவிடவில்லை. மக்களுக்குப் பயன்படும் கல்வி, மருத்துவம், பொருண்மியம், வங்கி உணவு, காவல்துறை, நீதிமன்றக் கட்டமைப்புக்களையும் ஏற்படுத்தினார். அவை சீரிய ஒழுங்குமுறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும் கண்காணித்தார். பொதுவாக போராட்ட அமைப்புகள் போரிடுவதுடன் மட்டும் நின்று விடும். இடையிடையே மக்கள் பணிகளை செய்யும் அமைப்புகளும் உலகில் இருக்கத்தான் செய்தன. ஆனால் மக்கள் பணிகளுக்காக நிழல் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி மக்கள் நலக் கட்டமைப்புகளை உருவாக்கி நிரந்தரமாக மக்கள் பணியாற்றிய அமைப்பு என்றால் அது விடுதலைப் புலிகள் மட்டுமே.

தலைவர் பிரபாகரன் மக்கள் பணியை தாண்டி அரசாங்கங்களே பின்னடிக்கும் செயல் ஒன்றையும் நடைமுறைப்படுத்தினார் – சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அக்கறை செலுத்தினார். புலிகள் அமைப்பு பாதுகாப்பு தேவைகள் தவிர அநாவசியமாக மரங்களையோ இயற்கை வளங்களையோ அழிக்கவில்லை. தேவைக்குப் பெறப்பட்டவற்றையும் விட அதிகமாக அவற்றை மீள உருவாக்குதில் அக்கறை செலுத்தியிருந்தது. சே குவேரா போன்ற மகத்தான தலைவர்கள் மக்களின் அடிமைத்தளை ஒழிக்க போர்களில் பங்கேற்றிருந்தாலும் தன் குடும்பத்தவர்களை ஈடுபடுத்தவில்லை. மேலும் போராட்ட தலைவர்களில் பலர் தங்கள் வாரிசுகளை அரியணையில் இருத்தி அழகுபார்த்தனர் – அழகுபார்க்க முனைந்தனர்.

ஆனால் குடும்பத்துடன் தன்னினத்துக்காகப் போராடிய தலைவர் பிரபாகரன். தனது மகன் – சார்ள்ஸ் அன்ரனி உயிருடன் இருந்திருந்தால் தலைவர் ஆக்கியிருப்பார். நாட்டினது அல்ல உரிமைக்காகப் போராடும் அமைப்பினது – இனத்தினது. இப்படி எந்தத் தலைவருக்கும் இல்லாத பண்புகளை தலைவர் பிரபாகரன் கொண்டிருந்தார். ஆயிரம் தலைவர்கள் தோன்றினும் தலைவர் பிரபாகரனுக்கு நிகர் அவர் மட்டுமே. வராத தலைவன் வந்தான். அந்தத் தலைவனை தமிழினம் பயன்படுத்தத் தவறிவிட்டது என்பதே வேதனையான உண்மை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# 'எட்கா' உடன்படிக்கை விரைவில் கைச்சாத்து

## இந்தியாவில் பிரதமர் உறுதி



புதுடில்லி, நவ. 26

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை கைச்சாத்திட தடையாகவுள்ள காரணிகள் சரி செய்யப்பட்டு வெகு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்ப முன்னர் புதுடில்லியில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் , வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டவர்களை சந்தித்துப் பேச்சு நடத்தினேன்.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலுள்ள உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் அனைத்து சந்திப்புகளிலும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே கைச்சாத்திடப்படவுள்ள புதிய பொருளாதார, தொழில்நுட்ப உடன்படிக்கைகள் (எட்கா) தொடர்பாகவும் கலந்துரையாடினோம். பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான தடைகளை நீக்கி அவற்றை இறுதிப்படுத்தி முன்னோக்கிச்செல்வது குறித்து தீர்க்கமாக கலந்துரையாடப்பட் டது என குறிப்பிட்டுள்ளார். (ச)

# மண் காத்த மாவீரர்களின் நினைவாக மரம் நடுவோம்

## முன்னாள் வடக்கு அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ.26

மாவீரர்களுக்காக கண்ணீர் சொரியும் இக்கார்த்திகை மாதம் வானம் மழைநீர் சொரியும் மாதமுமாக இருப்பதால் மண் காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களையும் நடுவோம் எனத் தெரிவித்துள்ளார் வட மாகாண முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

மாவீரர் தினம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"மாவீரர்கள் எமது மண்ணின் காவலர்கள். இந்த மண்ணையும் மக்களையும் அளவுக்கு அதிகமாக நேசித்ததன் காரணமாகத் தேசிய விடுதலை போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். தங்கள் குடும்ப உறவுகளைக் கடந்து மொத்தத் தமிழினத்தினதும் வலிகளைத் தங்கள் தோள்மேல் சுமந்தவர்கள். ஈகைக்கு உவமை வேறு இல்லாத அளவுக்கு தங்கள் இன்னுயிரை ஈந்த தியாக சீலர்கள். உக்கிரமான போர் நகர்வுகளின்போது கூடப் படையினரின் நினைவு நடுகற்களைப் பாதுகாத்த முன்னுதாரணம் ஆனவர்கள்.

போர் மரபுகளை மீறி இவர்களது நினைவு நடுகற்களைப் படையினர் ஆழக் குழிதோண்டி அகற்றிச் சிதைத்தாலும் எம் ஆழ்மனதில் நீங்காத நினைவுகளாக இடம்பெற்றிருப்பவர்கள். திக்கறுத் தவிக்கும் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக ஒளிவீசிக் கொண்டிருப்பவர்கள். தமிழர்கள் விக்கிரக வழிபாட்டுக்கு முன்னர் மரங்களை வளர்த்து இறைவனாக வழிபடும் வழக்கத்தை கொண்டிருந்தவர்கள். இப்போதும் ஆலயங்களில் தலவிருட்சங்களாக மரங்களை வளர்த்து வழிபடும் மரபை கடைப்பிடிப்பவர்கள். - என்றுள்ளது. (ச)

# சென்.சேவியர், இளைஞர் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்





வடமராட்சி, நவ.26

அண்ணாசிலையடி இளைஞர், சக்கோட்டை சென். சேவியர் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியை நடத்துகிறது.

இதில், நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் அண்ணாசிலையடி இளைஞர் - கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

அண்ணாசிலையடி இளைஞர் அணி வேகத்துடன் விவேகமாக விளையாடி 04:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அண்ணாசிலையடி இளைஞரின் நிவேதன் 2 கோல்களையும் கலிபரன், சாருஷன் ஆகியோர் ஒவ்வொரு கோல்களை போட்டனர். கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியின் ரவிவர்மன் ஒரு கோலைப் போட்டார்.

இரண்டாவது போட்டியில் சக்கோட்டை சென். சேவியர் அணியும் அல்வாய் நண்பர்கள் அணியும் மோதின. விறு விறுப்பாக நடந்த ஆட்டத்தில் 4:2 என சக்கோட்டை சென். சேவியர் அணி வெற்றி பெற்றது.

சக்கோட்டை சென்சேவியர் அணியின் சார்பில், றொஷ்றன் 11,24,31வது நிமிடங்களில் மூன்று கோல்களையும், நிறோஜன் 26வது நிமிடத்தில் ஒரு கோலையும் அல்வாய் நண்பர்கள் அணி சார்பில் நஜித் இரு கோல்களையும் அடித்தனர். (66)

## இன்று நாளும் கோளும்

26.11.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 10 ஆம் நாள்

அட்டமி முழுவதும் — அவிட்டம் மு.ப. 11.50 மணி வரை — சித்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 — சுபநேரம் 03.15 - 04.15 — எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | விருத்தி | நற்செயல் | நலம் | ஜெயம் | இரக்கம் | சாந்தம் | பணவரவு | தொல்லை | வரவு | நட்டம் | ஆரோக்கியம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிர்ந்தது தாமரை

தெற்காசியாவின் மிக உயரமான கட்டமாக தாமரைக் கோபுரம் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதன் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

நிர்மாணப் பணிகள் நிறைவடைவதால், விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள தாமரைப் பூ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பரீட்சார்த்தமாக ஒளிரச் செய்யப்பட்டது.

சீனா வேவு பார்க்கவே இக்கோபுரத்தை அமைக்கிறது என இந்தியா குற்றஞ்சாட்டியது தொடக்கம் பல சர்ச்சைகளை கடந்து இக் கோபுரம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## டென்மார்க் நகராட்சித் தேர்தல்

# ஈழத்தமிழர் வெற்றி



டென்மார்க், நவ.26

டென்மார்க் நாட்டின் பெருநகரங்களில் ஒன்றான சொண்டரபோர்க் நகர சபைத் தேர்தலில் ஈழத்தமிழர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சண்முகரத்தினம் வெற்றிபெற்று இரண்டாவது தடவையாக நகரசபை உறுப்பினரானார்.

அத்துடன் 31 பேர் கொண்ட உறுப்பினர்களில் 6 ஆவது அதிகூடிய விருப்பு வாக்குகளையும் இவர் பெற்றுள்ளார்.

சண்முகரத்தினம் கிளிநொச்சி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். 1990ஆம் ஆண்டு டென்மாக் சென்ற இவர், இயந்திரதொழில் நுட்பவியலாளராகப் பணியாற்றுகிறார். சுயதொழில் முனைவோராக வர்த்தக நிறுவனங்களையும் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சங்கிலி அறுப்பு



யாழ்ப்பாணம், நவ.26

மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் சங்கிலியை அறுத்தவர்கள் அவரைத் தள்ளி விழுத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் இராசபாத வீதி, கோப்பாயில் நேற்றுப் பகல் இடம் பெற்றது.

பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்தவர்களே சங்கிலியைப் பறித்து விட்டு அவரைத் தள்ளி விழுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

கீழே விழுந்ததில் காயமடைந்த பெண் வீதியில் சென்றவர்களின் உதவியுடன் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

# 30 கோடி டொலர் வருமான இலக்கு

கொழும்பு, நவ.26

சிறு ஏற்றுமதிப் பயிர்களைப் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக ஏற்றுமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சர்வதேச சந்தையில் சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான கேள்வியை மேலும் அதிகரிப்பதே இதன் நோக்கமாகும் என ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்மூலம் 30 கோடி அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெறுவதே இலக்கு என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# தலைவா 63

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

**51.** மாத்தையாவுக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் அமைப்பில் பிரதித் தலைவர் பதவியை எவருக்கும் வழங்கவில்லை.

**52.** விடுதலைப்புலிகள் அமைப்பில் முதன் முதலில் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் பிரபாகரனே. 1966 இல் தொடர்பு சாதனங்களை இந்தியப் பொலிஸார் பறிமுதல் செய்த போது உண்ணாவிரதப் போராட்டத்தில் பிரபாகரன் ஈடுபட்டார்.

**53.** உண்ணாவிரதம் இருந்து மரணித்த தியாகி திலீபனின் நினைவுதினமான செப்ரெம்பர் 20ஆம் நாளில் பிரபாகரன் உணவருந்துவதில்லை. இதே போன்று மாவீரர் நாளில் உணவைத் தவிர்த்து வந்தார்.

**54.** திலீபனின் மரணத்தின் போது பிரபாகரன் கண்ணீர் விட்டு அழுதிருந்தார். இதுவே அவர் கண்ணீர் விட்ட மூத வெளிப்படையான சம்பவமாக அமைந்தது.

**55.** எதிரிகளிடம் சிக்கக் கூடாது என்பதற்காகப் போராளிகளுக்கு சயனைட் குப்பி அணியும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

**56.** பிரபாகரன் எப்போதும் தனது சயனைட் குப்பியைக் கழற்றியதில்லை. மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் எதிரிகளிடம் சிக்கிய போது தனது சயனைட் குப்பியைக் கழற்றி அவர்களுக்கு அன்ரன் பாலசிங்கம் மூலம் அனுப்பி வைத்திருந்தார்.

**57.** புலிகள் இயக்கத்தில் சிகரெட் பிடிக்கவும், மது அருந்தவும் அனுமதிக்கப்பட்ட ஒரே ஒரு நபர் அன்ரன் பாலசிங்கம் மட்டுமே, ஆனால் தலைவருடன் இருக்கும் சமயத்தில் அவர் சிகரெட் பிடிப்பதில்லை.

**58.** சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சமயத்திலும் முக்கிய சமர் காலத்திலும் மீசையை எடுத்து விடுவது பிரபாகரனின் வழக்கம். அவரின் மீசை தொடர்பில் சுவாரசியமான விடயங்கள் உள்ளன.

**59.** குடாரப்பு தரை இறக்கத்தில் வோக்கியில் கட்டளையிடும் பிரிகேடியர் பால்ராஜின் படமே பிரபாகரனின் அறையை அலங்கரித்தது.


**60.** தலைவர் பிரபா, எம். ஜி. ஆருக்கு வழங்கிய கைத்துப்பாக்கியை அவர் எப்போதும் தனது தலையணையின் அடியில் வைத்திருந்தார்.

**61.** தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் போரிடும் அணிகளில் கரும்புலிகளை அவர் மிகவும் நேசித்தார். போரின் வெற்றியில் கரும்புலிகளின் பங்களிப்பை பெரும் பலமாகக் கருதினார்.

**62.** வன்னி இறுதிப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் எனக்கூறிய இலங்கை இராணுவமும், அரசாங்கமும் பிரபாகரன் போன்ற உடலைக் காட்டியது. எனினும் உலகெங்கும் வாழும் தமிழர்களும் வேறு பலரும் இதனை நம்பவில்லை.

**63.** வன்னி இறுதிப் போர் முடிந்து பல மாதங்களின் பின்னரும் வல்வெட்டித்துறையில் பிரபாகரன் பிறந்த வீடு முழுமையாக இருந்தது. வீட்டைப் பார்க்கவந்த சிங்கள மக்கள் பலர் அந்த வீட்டிலிருந்து ஒருபிடி மண்ணை எடுத்துச் சென்றனர். இதைத்தொடர்ந்து இராணுவம் வீட்டை இடித்துத் தள்ளியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர் இருந்திருக்க வேணும்.....!

காலமை ஐஞ்சு மணி இருக்கும். கோயில் மணி அடிக்கேக்கை எழும்பிச் செய்ய வேண்டிய வேலை எல்லாம் செய்திட்டு அவரை நினைச்சு ஒரு பிரார்த்தனை. நான் மட்டுமில்லை. அவரை மனசிலை வைச்சிருக்கிற எல்லாரும் அவருக்காக, அவரது தியாகத்துக்காக, அவரது வீர மரணத்திற்காக, அவரை இண்டைக்கு நினைச்சு ஒரு பிரார்த்தனை செய்யினம்.

தன்னைத் தன்ரை வாழ்க்கையைத் தியாகம் பண்ணினவருக்கு இப்ப எங்களாலை இதைத்தான் செய்யலாம்? மற்றாக்களின்ரை நினைவிலை கருணையோடையும், அன்போடையும் வாழுறதெண்ணுறது பெரிய காரியம். அந்தப் பாக்கியம் எல்லாருக்கும் கிட்டாது.

அப்பு சொல்லுவார். கலையை எல்லாரும் படிக்கலாம். ஆனால் கலை ஆரேன் ஒராளைத்தான் பிடிக்கும். அவன் தான் கலைஞன் எண்டு. அது மாதிரி எல்லாரும் வீரத்தைப் பேசலாம். ஆனால் ஒரு சிலரைத்தான் வீரன் எண்டு உலகம் சொல்லும். எங்கடை வரலாற்றிலை அவரும் வீரன். அவராலை வழி நடத்தித் துயிலுமில்லங்களிலை மீளாத்துயில் கொண்டிருக்கிற எல்லாரும் வீரர்கள் தான்.

தான் கொண்ட தியாகத்தைக் கடைசி மூச்சு வரைக்கும் கொண்டு போறது எண்டது எல்லாராலையும் முடியாத காரியம். கடைசி மூச்சும் கதை சொன்ன வரலாறுகள் கனக்கக் கிடக்கிது. அதுவும் தமிழனிட்டை அது மாதிரிக் கன கதையள் இருக்கு.

இண்டைக்கு அவரில்லாத உலகமாப் போச்சுது. நேற்றைக்கும் நம்பமாட்டியள் பருத்தித்துறை பஸ்ஸிலை பேப்பர் வாசிச்சுக் கொண்டிருந்த ஒரு ஆள் தன்ரை மனந்திறந்து சொன்னார் “அந்த ஆள் இருக்குமெண்டால் இப்பிடியெல்லாம் நடக்க விட்டிருப்பரோ?” எண்டு சொன்னவருக்கு வயசு எழுபதுக்கு மேலைதான் இருக்குமேயொழியக் குறையாது. தன்ரை இனம் மானங்கெடப்பிடாது, தறிகெட்டுப் போகப்பிடாது, மானம் மரியாதையோடை இருக்க வேணும் எண்டு விரும்பிற ஒவ்வொருவரிட்டையும் இருக்கிற ஆசையும், விருப்பமும் இது தான். “அவர் இருந்திருக்க வேணும்”.

சரியான தலைமை இல்லாததாலை எல்லாம் விலை போட்டுது. எல்லாரும் விலை போட்டினம். தடி எடுத்தவன் தண்டல்காரன் எண்ட மாதிரி தலைவர் எண்டு தன்னைத் தானே சொல்லிக் கொண்டு எத்தினை திரியிதுகள். கல்லாப் பெட்டிக்கை இருக்கிற சில்லறையள் துள்ளிறமாதிரி எத்தினை துள்ளுதுகள்.

அவர் இருந்திருந்தால் ஆமீன்ரை ஆக்கிரமிப்பு இருந்திருக்காது. நாங்கள் ஒண்டையும் அடைவு வைச்சிருக்க மாட்டம். கூட்டமைப்பு உடைஞ்சிருக்காது. கண்ட கண்டதுகளெல்லாம் கட்சீக்கை வந்து காட்டிக் குடுக்கிற வேலையையும் செய்திருக்கிதுகள். வாள் வெட்டு, கஞ்சா எண்ட குழப்பமிருக்காது. குப்பையள் குப்பையளாவே இருந்திருக்கும். நல்லது நல்லதாவே இருந்திருக்கும். குப்பையள் நல்லதா வேஷம் போட்டிருக்காது.

அவர் இருக்கேக்கை. கஷ்டப்பட்டம் இல்லையெண்ணேல்லை. அளவோடை சீவிச்சம். கொள்ளையளில்லை. வடிவாப் பயிர் செய்தம். எங்களிட்டை இருந்த திறமை எல்லாம் வெளிப்பட்டிது. முக்கியம் ஒழுக்கம் இருந்திது. எல்லாரும் நல்ல மனுசராச் சீவிச்சம். மனச்சாட்சியோடை இருந்தம். ஏறோப்பினேன் செய்யிற அளவுக்கு எங்கடை தொழில் நுட்பம் இருந்திது. மொத்தத்திலை உலகம் எங்களைக் கண்டு எல்லாவிதத்திலையும் பயப்பிட்டிது. மனுசரா இருக்கப்படாது, அது எங்களுக்கு விருப்பமில்லை எண்டு ஆசைப்பட்ட ஆக்கள் கொஞ்சம் வில்லங்கப் பட்டவை. கிறுதா விளையாட்டுக் காரருக்கு அவற்றை போக்குப் பிடிக்கேல்லைத்தான். ஆனால் அதுக்கு ஒண்டுஞ் செய்யேலாது.

இண்டைக்கும் வில்லங்கம் எண்டு வரேக்கை அவரைத் தானே நினைக்கிறம். எங்கும் வாள் வெட்டு எண்டு நித்திரை இல்லாமல் இருக்கேக்கை ஆரை நினைக்கிறம்? ஆமி காணியை விடமாட்டன் எண்டு அடம்பிடிக்கேக்கை ஆரை நினைக்கிறம்? புத்த பிக்கு அடாவடித்தனம் பண்ணேக்கை ஆரை நினைக்கிறம்? பொது சனத்தின்ரை காணீக்கை புத்தர் சிலையைக் கொண்டு வந்து வைக்கேக்கை ஆரை நினைக்கிறம்? அதிகாரியள் பொதுப் பணத்தைச் சுருட்டேக்கை ஆரை நினைக்கிறம்? குடும்பப் பிரச்சினையள் வரேக்கை ஆரைத் தான் நிகைகிறம்?

அரசியல் தொட்டு, ஆக்கிரமிப்பெண்டு வந்து, குடும்பப் பிரச்சினைவரை அவரில்லை எண்டு நினைக்கிறமே..! அவர் தான் தலைவர்.. அந்த நினைவுகள் அவரை அலங்காரம் செய்யட்டும். அதுதான் நாங்கள் அவருக்குக் குடுக்கிற மரியாதை.

- வில்லங்கம் விநாசி



# தலைவா 63

01. பிறப்பு -1954 நவம்பர் 26 (யாழ்ப்பாணம் இணுவில் வைத்தியசாலை).

02. பூர்வீகம் - வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

03. அனுராதபுரம் எல்லாளன் சமாதியருகே வேலுப்பிள்ளை குடும்பம் குடியிருந்தபோதே பிரபாகரன் கருக்கொண்டார். இதனால் அவரை எல்லாளனின் மறுபிறவி என்றே தந்தை வேலுப்பிள்ளை கருதினார்.

04. தந்தை - வீராசாமி திருவெங்கடம் வேலுப்பிள்ளை.

05. தாய் - வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை.

06. மனைவி - பிரபாகரன் மதிவதனி

07. பிள்ளைகள் - சாள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன்.

08. ஆரம்பக்கல்வி - மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயம், பின்னர் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் 10ஆம் ஆண்டு வரை கல்வி கற்றார்.

09. கரிகாலன், மணி, மணிவண்ணன், மணியம் என வேறு பெயர்களால் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டார். குடும்பத்தினரும் வயதில் மூத்தவர்களும் தம்பி என்று அழைத்தனர். புலிகளின் போராளிகள் “அண்ணை” (அண்ணா), தலைவர் என்றும் அழைத்தனர். தேசியத் தலைவர் என்ற பெயரை மக்கள் சூட்டினர்.

10. 1966 இல் உருவாக்கிய அமைப்புக்கு 1972 இல் புதிய தமிழ் புலிகள் எனப் பெயரிட்டார்.

11. புதிய தமிழ் புலிகள் 1976 மே 5 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

12. படகுகளைச் செலுத்துவதிலும் பிரபாகரன் வல்லவராக இருந்தார். புலிகளால் உருவாக்கப்பட்ட அதிவேக “குருவி” படகுகளை பிரபாகரன் ஓய்வு நேரங்களில் செலுத்துவார்.

13. பிரபாகரனைக் கொல்ல யாழ்ப்பாணம், கொக்குவில், பிரம்படிப் பகுதியிலும், பின்னர் மணலாற்றிலும் இந்திய இராணுவம் முயன்றது. அவற்றை முறியடித்துப் பிரபாகரன் தப்பினார்.

14. புலிகளின் அமைப்பில் கடுமையான ஒழுக்கத்தைப் பின்பற்றியவராகவும், பின்பற்றச் செய்பவராகவும் இருந்தார்.

15. குளொக் 17 ரக பிஸ்ரல், எம்.16ஏ3 குளொட் ரைபிள் என்பவற்றைப் பயன்படுத்துவதில் விருப்பமுடையவர் மட்டுமல்ல வல்லவரும்கூட.

16. மதிவதனியை 1984 ஒக்ரோபர் 01 ஆம் திகதி சென்னை திருப்போரூர் முருகன் ஆலயத்தில் திருமணம் செய்து கொண்டார்.

17. பிரபாகரன் மதிவதனியின் திருமணம் கே.பி. தலைமையில் நடந்தது. இந்நிகழ்வில் பங்கேற்றவர்களில் கே.பி. மட்டும் இப்போதும் உயிருடன் உள்ளார்.

18. யாழ். மாநகரசபையின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவைப் பொன்னாலையில் வைத்துச் சுட்டுக் கொன்றார். விடுதலைப் போராட்டத்தில் தலைவர் ஏற்படுத்திய முதல் மரணம் இதுவே.

19. சமைப்பதில் மிகவும் விருப்பமுடையவர்.

20. தன்னைச் சந்திக்கும் போராளிகளுக்கு தன் கரங்களினாலேயே உணவைப் பரிமாறும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

21. பிரபல நடிகர் ஹரிசன் போர்ட்டினின் ரசிகர்.

22. தமிழ் நாடு முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர் மீது பெரும் மதிப்பும், விருப்பமுடையவர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி மீதும் பெரும் மரியாதை கொண்டவர்.

23. சாண்டிலியனின் கடல்புறா, வேங்கையின் மைத்தன், கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல்கள் இவருக்கு மிகவும் பிடித்தவை.

24. கடல்புறா நாவல் மீது கொண்ட விருப்பமே, கடற்புலிகள் பிரிவுக்கு ஆரம்பத்தில் கடல்புறா எனப் பெயரிட்டார்.

25. “மரணத்தை எண்ணங் கலங்கிடும் விஜயா” என்ற கீதாபோதேசப் பாடலை மிகவும் விரும்பிக் கேட்பார்.

26. தனது மானசீக வழிகாட்டியாக இந்தியாவின் சுதந்திர வீரர் சுபாஸ் சந்திரபோஸைக் கொண்டிருந்தார்.

27. ஆர். எஸ். நல்லபெருமாள் எழுதிய “கல்லுக்குள் ஈரம” நாவலை மீண்டும் மீண்டும் தான் வாசித்தார் எனக் கூறியுள்ளார்.

28. ரைம், நியூஸ்வீக் இதழ்களை மொழிபெயர்த்து சமகால சர்வதேச அரசியலை அறிந்து கொள்வதில் விருப்பமுடையவர்.

29. போர், இராணுவம், ஆயுதங்கள் தொடர்பான நூல்கள் பலவற்றை மொழி பெயர்த்துப் படிப்பதிலும் அவற்றை போராளிகளுக்குக் கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டுபவர்.

30. தன்னைச் சந்திக்கும் போராளிகளுக்கு ஆங்கிலம், தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளுமாறு அடிக்கடி வலியுறுத்துவார். அவற்றுக்கான வழிவகைகளையும் ஒழுங்குபடுத்துவார்.

31. சிறுவயதில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம் என்பவற்றில் ஆர்வம் காட்டினார்.

32. புட்டு, சம்பல், இறால் கறியை விரும்பி உண்பார். கூழையும் விரும்பிக் குடிப்பார்.

33. மகாபாரதக் கதையில் வரும் கண்ணனை மிகவும் நேசித்தார்.

34. எந்தச் சோதனைகளும் இன்றி ஆயுதத்துடன் பிரபாகரனைச் சந்திக்கும் வாய்ப்பு புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானுக்கு மட்டுமே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இந்தியாவில் இருந்த போது மதிவதனி ஹோலி கொண்டாடினார். இதற்காக அவரைக் கடுமையாக பிரபாகரன் ஏசினார். இதனால் அவர் அழுதாராம்.

36. சிறுத்தைப் புலியைத் தனது செல்லப் பிராணியாக வளர்த்தார்.

37. 0001 என்பது இவரின் இலக்கத்தகடு ஆகும்.

38. பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலரின் இலக்கம் “0” என ஆரம்பிக்கும்.

39. புலிகளின் முதல் தளபதியான சீலனின் இயற்பெயரான சாள்ஸ் அன்ரனியின் பெயரையே தனது மூத்த மகனுக்கு வைத்தார். தனது மெய்ப் பாதுகாவலரான மயூரனின் நினைவாக அவரின் இயற்பெயரான துவாரகன் என்ற பெயரை துவாரகா எனத் தனது மகளுக்கு சூட்டினார்.

40. தாக்குதலுக்குச் செல்லும் கரும்புலிகளுடன் உணவருந்திப் புகைப்படம் எடுத்துக்கொள்வது வழக்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் இதனை அவர் தவிர்க்கவில்லை.

41. இந்தியப் படையினர் இவரைத் தேடிய காலத்தில் தான் மரணித்தால் அவர்களிடம் தனது உடல் கிடைக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் அவர் எங்கு சென்றாலும் தன்னருகே கான் ஒன்றில் பெற்றோல் வைத்திருப்பார்.

42. தமிழீழக் கொள்கையில் இருந்து தான் விலகினால் தனது பாதுகாவலரே தன்னைச் சுட்டுக் கொல்லலாம் என உத்தரவிட்டிருந்தார்.

43. திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் இராணுவ ட்ரக் மீதான தாக்குதலே விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல். இத்தாக்குதலில் நேரடியாகப் பங்கேற்றிருந்தார்.

44. செல்லக்கிளி அம்மான் வளர்த்த பசு மாட்டை விற்றே பிஸ்டல் துப்பாக்கியை, பிரபாகரன் அமைப்புக்கு வாங்கினார்.

45. புலிகளின் வலிந்த தாக்குதல்களுக்கும், படைகளுக்கும் பிரபாகரனே பெயர் சூட்டுவார்.

46. புலிகள் அமைப்பில் ஏற்பட்ட முரண்பாட்டால் சில மாதங்கள் விலகிச் சென்றிருந்தார்.

47. பேனாவை விரல்களிடையில் பிடித்து எழுதும் பழக்கம் கொண்டவர்.

48. இடது கைப்பழக்கம் உடையவராக இருந்தார்.

49. அலெக்ஸ் ஹேலியின் 7தலை முறைகள் என்ற நாவலில் வரும் “இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது, போராட்டம் நடத்தாமல் யாரும் எதையும் தரமாட்டார்கள்” என்ற வரிகளை அடிக்கோடு போட்டு வைத்திருந்தார்.

50. “இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி” என்ற வாசகத்தைத் தனது தினக்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப்பரிசில் பரீட்சை: வடக்குக்கு 2 ஆம் இடம்

யாழ்ப்பாணம், நவ. 26

"தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் வடக்கு மாகாணம் இந்த ஆண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. கல்வி வலயங்களின் ரீதியாக யாழ்ப்பாணக் கல்வி வலயம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பிடித்துள்ளது."

- இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தில் இம்முறை 20 ஆயிரத்து மாணவர்கள் தோற்றினர். இவர்களில் 2 ஆயிரத்து 226 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இது தேசிய மட்டத்தில் வடக்கு மாகாணத்தை இரண்டாம் இடத்துக்கு முன்னேற்றியது. வலய ரீதியாக யாழ்ப்பாணக் கல்வி வலயம் தேசிய ரீதியில் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது.

தேசிய மட்ட கணித வினா - விடைப் போட்டியில் வடக்கு மாகாண மாணவர்கள் 17 பேர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர். இளநிலைப் பிரிவில் 9 தங்கப் பதக்கங்களையும் மூத்த பிரிவில் 8 பதக்கங்களையும் வடக்கு மாகாண மாணவர்கள் பெற்றனர்.

தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் வகை 1 இல் (தரம்-6) முதலிடம் பிடித்த 115 மாணவர்களில் 33 மாணவர்கள் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். வகை 2 இல் (தரம் -7,8) முதலிடம் பெற்ற மாணவர்களில் 12 பேர் வடக்கு மாகாண மாணவர்கள்.

வகை 3 இல் (தரம் -9,10,11) முதலிடம் பெற்ற 44 பேரில் 7 மாணவர்கள் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டிய வடக்கு மாகாண மாணவர்கள் 4 பேர் சர்வதேச போட்டியில் இந்த வருடம் பங்கேற்கின்றார்கள்.

# காணிகளை விடுவிக்க தெரிவுக் குழு

யாழ்ப்பாணம், நவ. 26


வடக்கில் இராணுவத்தின் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான பணிகளை ஒருங்கிணைக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும்"

-இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் கூட்டு எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன.

நேற்றுமுன்தினம், வரவு - செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவம் வசமுள்ள காணிகளின் விடுவிப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழு துரிதப்படுத்தும். வடக்கு காணிகள் விவகாரம் இப்போது சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள் உள்நாட்டு மட்டத்தில் தீர்க்கப்பட முடியும்.

இந்தப் பகுதிகளில் இப்போது கண்ணி வெடிகளை அகற்றும் செயற்பாடுகள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன." என்றும் அவர் கூறினார்.



# தலைக்கேறிய வெறியால் உயிருக்கு உலை வைப்பு

பருத்தித்துறை, நவ. 26

பருத்தித்துறையில் டிராக்டரால் மோதி ஒருவர் கொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. எனினும் இது கொலையல்ல விபத்து என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று அதிகாலை 1.45 மணியவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், பருத்தித்துறை முதலாம் கட்டைையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சிதம்பரபிள்ளை சிவபாலன் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் வெதுப்பகம் ஒன்றை நடத்தி வந்துள்ளார். நேற்றைய தினம் நண்பர்களுடன் இணைந்து மைதானத்தில் மது அருந்திக் கொண்டிருந்தார்.

இதன்போது ஏற்பட்ட தகராறை அடுத்து நண்பர்களில் ஒருவர் டிராக்டரால் மோதினார் என்றும் இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது.

எனினும் இது கொலையல்ல விபத்தே என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. இது குறித்து உறுதியான தகவலைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை. பிரேத பரிசோதனை, விசாரணைகளின் பின்னரே உறுதியான தகவல்களை வெளியிட முடியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான 43 வயதான டிராக்டர் சாரதியை கைது செய்துள்ள பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தொடர்ச்சிகள்

**ஜனநாயக...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான காரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கூட்டு எதிரணிக்கும் இடையிலான முரண்பாடே. தேர்தல் ஒத்தி வைப்புக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபாவே பொறுப்பு கூறுகிறார்.

இதனால் தேர்தல் தாமதமாவதற்கும் அவரே பொறுப்பு கூற வேண்டிய நிலையில் உள்ளார்.

அவர் பொறுப்புக் கூற வேண்டும்தான். ஆனால் இதற்கு முழு பொறுப்பும் ஏற்க வேண்டியது அரசாங்கமே. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. - என்றார். (ச)

**முன்னாள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதுடன் புலிகளின் எழுச்சிப் பாடல்களும் ஒலிக்கவிடப்பட்டது.

ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதற்கான அனுமதி வல்வெட்டித்துறை பொலிஸிடம் பெறப்பட்டிருந்தது. ஒலிபெருக்கி மூலம் அறிவித்தவர்கள் பருத்தித்துறைக்கு சென்றுள்ளனர். அவர்களை மாலை 6.45 மணியளவில் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

3 மணித்தியாலத்திற்கும் அதிகமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இது குறித்து தகவல் அறிந்த வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இவ்விடயத்தில் தலையிட்டு அவர்களை விடுவித்தார். (ச-11)

**தமிழீழம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவித்திரு ஹெல உறுமய நடத்தியது. சமஷ்டி ஆட்சி வேண்டாம் என்று வலியுறுத்தியே இந்தப் பேரணி நடத்தப்பட்டது. பேரணிக்கு முன்பாக கோட்டே ரயில் நிலையம் முன்பாக துண்டுப்பிரசுரங்களை அவர்கள் விடுவித்திருந்தனர்.

அதில் புதிய அரசியலமைப்பு மீது சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் எதிராக வாக்களிக்குமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராகவும் பல விடயங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

எவ்வாறு நாடு பிரிகிறது? இரத்த ஆறு எப்படி ஓடும் என்பது குறித்து துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உதய கம்மன்பில் எம்.பி.தெரிவித்தார்.

மேலும், குறைந்த அதிகாரங்களுடன் இருக்கும்போதே வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோர் வடக்குக்கு வேறு நாடு என்ற உணர்வில் இருக்கின்றனர். இவர்களுக்கு அதிகாரங்களை வழங்கினால் எப்படி நடந்து கொள்வர் என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் உணர வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

**தலைவரின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு சில முக்கிய திட்டங்களை அறிவிக்கவுள்ளேன்.

முன்னாள் போராளிகள், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் மீளெழக் கூடிய வகையில் அந்தத் திட்டங்கள் அமையும்." - என்றார். (ச)

**பிரபாகரன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று வருகின்றன.

பொலிஸ், இராணுவத்தின் கண்காணிப்பு, ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதும், நிகழ்வுகள் தடுக்கப்பட்டனவா என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேபோன்று புலம்பெயர் தேசங்களிலும் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம் களைகட்டியுள்ளது. (ச)

**ஆவா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவா குழுவின் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார். இவர் அளித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23 வயதான முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம் இளைஞரை விடுவிக்குமாறு உயர் அரசியல்வாதிகள் உட்பட பலர் உயர் பொலிஸ் அதிகாரிகளை அணுகியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் தொடர் வன்முறைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்படுவது இதுவே முதல் தடவை. இவர் தவிர வேறு முஸ்லிம் இளைஞர்களுக்கும் வன்முறைக் குழுக்களுடன் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகின்றது எனவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனைகளுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சியாருக்கு வழக்கு




சென்னை,நவ.26
நாச்சியார் திரைப் பட டீசர் விவகாரத்தில் இயக்குனர் பாலா மற்றும் நடிகை ஜோதிகா மீது மேட்டுப் பாளையம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.
பாலா இயக்கத்தில் தற் போது உருவாகி இருக்கும் படம் 'நாச்சியார்'. இதில் ஜோதிகா, ஜி.வி.பிரகாஷ், உள்ளிட்ட பலர் நடிக்கிறார் கள். இளையராஜா இசை யமைத்துள்ளார்.
விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இந்தப் படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது இறுதிக் கட்டப் பணிகள் மும்முரமாக நடை பெற்று வருகின்றன. சமீபத் தில் இதன் டீசர் வெளி யானது. இதில் ஜோதிகா கெட்ட வார்த்தையில் ஒரு வசனம் பேசுவார்.
இதனால், இந்த டீசருக்குப் பல எதிர்ப்புகள் கிளம்பின. இந்த நிலையில், படத்தை இயக்கிய பாலா மற்றும் இதில் நடித்த ஜோதிகாவின் மீது வழக்குத் தொடரப்பட் டுள்ளது. இந்த டீசரில் பெண் மையை இழிவுபடுத்தும் கெட்ட வார்த்தை பயன் படுத்தி இருப்பதாக, இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294 பி மற்றும் தகவல் தொழில் நுட்ப சட்டப் பிரிவு 67 கீழ் நடவடிக்கை எடுக்குமாறு கோவை மாவட்ட மேட்டுப்பாளை யம் குற்றவியல் நீதிமன்றத் தில் மனுத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது. (இ)

# விடுதியில் தீ 11 பேர் கருகினர்



பதுமி,நவ.26
ஜோர்ஜியாவின் கருங்கடல் கடற்கரையில் உள்ள விடு தியில் ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இங்குள்ள லியோகிராண்ட் விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்தப் பகுதி முழுவதும் புகைமூட்டம் ஏற்பட்டதால் புகையைச் சுவாசித்த பலர் மயக்க மடைந்து விழுந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.
விபத்தில் தீக்காயம் அடைந்தும் புகையைச் சுவாசித் தும் பாதிக்கப்பட்ட 11 பேர் பலியாகினர். 11 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை இங்கு மிஸ் ஜோர்ஜியா அழகிப் போட்டி நடைபெற்றது. அவர் களில் யாரும் அங்கு இல்லாததால், அதிர்ஷ்ட வசமாகக் காயமின்றி தப்பினர். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜோர்ஜியா அதிபர் ஜியார்ஜி மார்க்வெலாஷ்விலி இரங்கல் தெரிவித்துள்ளார்.(இ)

# மீண்டும் அதிர்ந்தது துருக்கி




அங்காரா,நவ.26
துருக்கி நாட்டின் தென்மேற் குப் பகுதியில் 5.1 ரிக்கடர் அளவில் நேற்றுச் சனிக் கிழமை காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. முகலா மாகாணத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஏஜியன் கடலில் சுமார் 6.3 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உண ரப்பட்டதாகக் கந்திலி புவி யியல் ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. இரவு நேரத் தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஒன்றுதிரண்ட னர். அருகில் உள்ள நகரங் களிலும் நில அதிர்வு உண ரப்பட்டதாகக் கூறப்படுகி றது. இருப்பினும் இந்த நிலநடுக்கத்தில் எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.
கடந்த 2011-ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த 7.2 ரிக்டர் அள விலான நிலநடுக்கத்தால், 600க்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தனர். கடந்த புதன்கிழமை துருக்கியின் முகலா மாகாணத்தில் தென் கிழக்கு பகுதியிலும் ரிக்ட ரில் 5 புள்ளியில் நிலநடுக் கம் ஏற்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிவகார்த்திக்கு போட்டியாகும் சந்தானம்





சென்னை,நவ.26
சிவகார்த்திகேயனின் படம் வெளி வரும் திகதியிலேயே சந்தானத்தின் 'சக்கபோடு போடு ராஜா' படமும் வெளிவரவுள்ளது.
சிவகார்த்திகேயன் நடித்துள்ள வேலைக்காரன் படம் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையைக் குறிவைத்து வெளிவரவுள்ளது. இந்தப் படத்தில் சிவகார்த்தி கேயனுக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். இந்த நிலையில் இந்தப் படத்துக்குப் போட்டியாக சந்தானத்தின் 'சக்க போடு போடு ராஜா' படம் டிசெம்பர் 22ஆம் திகதி வெளிவரவுள்ளது. மேலும் பாலா வின் நாச்சியார், அட்டக்கத்தி தினேஷ் நடித்துள்ள உள்குத்து ஆகிய படங்களும் இதே திகதியில் வெளிவரவுள்ளன. (இ)

# டிரம்ப் சொன்ன பொய்

நியூயோர்க்,நவ.26
அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ரைம் இதழ் குறித்துத் தெரிவித்த கருத் துக்கு, ரைம் பத்திரிகை நேற்றுக் காலை (சனிக்கிழமை) உடனடியாக மறுப்புத் தெரிவித்துள்ளது.
அமெரிக்க ஜனாதிபதி தனது ருவிட்டர் பக்கத்தில் " ரைம் பத்திரிகை இந்த வருடத்தின் சிறந்த மனிதராக என்னைத் தெரிவு செய்யவுள்ளதாகக் கூறியுள்ளது. ஆயினும் அதற்காக புகைப்படங்களுக் குப் போஸ் கொடுக்க வேண்டுமெனக் கூறியதால் அந்த விருதை நான் நிராக ரித்தேன்" எனக் கூறியிருந்தார்.
இது குறித்து உடனடியாக ரைம் பத்திரிகை மறுப்புத் தெரிவித்துள்ளது "அப்படி எந்த விருதை வழங்குவ தாகவும் அமெரிக்க ஜனாதிபதிக்கு நாம் அறிவிக்கவில்லை" என டிரம்பின் பொய்யை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. (இ)

# வடகொரியாவுக்கு கதவடைப்பு



பீஜிங்,நவ.26
வடகொரியா செல்லும் முக்கிய வீதி போக்குவரத்தைத் துண்டித்து வட கொரியாவை மேலும் நெருக்கடிக் குள் தள்ளியுள்ளது சீனா.
சீனாவில் இருந்து இனி வடகொரி யாவுக்கு விமானப் போக்குவரத்துச் சாத்தியம் இல்லை என நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவித்த நிலையில், நேற்று சனிக்கிழமை தரைவழிப் போக்குவரத்தையும் துண்டித்துள்ளது சீனா.
சீனாவின் இந்த அதிரடி முடிவால் வடகொரியா கடும் நெருக்கடியைச் சந்திக்கும் என அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
ஆனால் சீனாவில் இருந்து வட கொரியா செல்லும் பயணிகளின் எண் ணிக்கை பெருமளவு சரிவடைந்ததால் மட்டுமே விமான சேவையை ரத்து செய்துள்ளதாகச் சீனா அறிவித்துள் ளது. மேலும் வடகொரியாவின் தொடர் ஏவுகணைச் சோதனை, உலக நாடுகளின் பொருளாதாரத் தடை உள்ளிட்டவை களால் வர்த்தகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் வடகொரியா நாடுகளிடையே கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 50 வீதமான வர்த்தகம் பாதிக்கப்பட் டுள்ளது.வடகொரியாவின் முக்கிய நட்பு நாடாக சீனா மட்டுமே நெடுங் காலமாக இருந்து வருகிறது. ஆனால் வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன் மேற்கொள்ளும் அடாவடி நடவ டிக்கைகளால் அந்த உறவில் சமீப காலமாக விரிசல் ஏற்பட்டு வருகிறது.
இந்த விடயத்தில் இரு நாடுகளும் போதிய அக்கறை எடுத்துக் கொள் ளாவிட்டால் நிரந்தர எதிரிகளாக மாறவும் வாய்ப்பு உண்டு என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின் றனர். அமெரிக்கா தென் கொரியா வுடன் நெருங்குவதால் சீனா தென் கொரியாவுடன் இணக்கமாகச் செல்ல மறுத்து வருகிறது. (இ)

# விமானத்தில் அதிர்வு 11 பேர் படுகாயம்

நியூயோர்க்,நவ.26
அமெரிக்காவில் சிக்காகோ நகருக்குச் சென்ற விமானத்தில் திடீரென்று அதிர்வு ஏற்பட்டதால் 11 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.
தைவானின் தைபே விமான நிலையத் தில் இருந்து அமெரிக்காவின் சிக்காகோ நோக்கிப் புறப்பட்ட போயிங் ரக விமா னத்திலேயே இந்தத் திடீர் அதிர்வு ஏற்பட்டுப் பயணிகள் விபத்துக்குள் ளாகினர். விமானம் சிக்காகோ வந்தி றங்கியவுடன் 8 விமான ஊழியர்கள் மற்றும் 3 பயணிகள் உள்ளிட்ட படு காயமடைந்த 11 பேரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.குறித்த விபத்துத் தொடர்பில் வெளியான புகைப்படங்களில் விமான ஊழியர்கள் நிலை தடுமாறுவதையும், உணவு உள் ளிட்ட பொருட்கள் தரையில் சிதறிக் கிடப்பதும் பதிவாகியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

ஞாயிறு 26 நவம்பர் 2017



# ஸ்மித் சதம்: ஆஸி பலம்

பிரிஸ்பேன்,நவ.26

ஆஷஸ் டெஸ்ட்டின் மூன்றாவது நாளில் அவுஸ்திரேலியா அணி 328 ஓட்டங்கள் சேர்த்து, 26 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. பிரிஸ்பேனில் நடந்து வரும் ஆஷஸ் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஸ்மித் 64 ஓட்டங்களுடனும், மார்ஷ் 44 ஓட்டங்களுடனும் நேற்றுத் தொடர்ந்தனர்.

51 ஓட்டங்கள் சேர்த்த ஷேன் மார்ஷ், வேகப்பந்து வீச்சாளர் பிராட் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த பெய்ன் 13 ஓட்டமும், ஸ்டார்க் 6 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ஆனால், நங்கூரம் போல நிலைத்து நின்று ஆடிய அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் 261 பந்துகளில் சதமடித்தார். 8 அவது விக்கெட்டுக்கு அவருடன் ஜோடி சேர்ந்த கம்மின்ஸ் தனது 42 பங்குக்கு ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய ஹேசல்வுட், லயன் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 130.3 ஓவர்களில் 328 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. ஸ்டீவன் ஸ்மித் மட்டும் ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் அவுஸ்திரேலியா 26 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பின்னர், இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணியின் குக் 7 ஓட்டங்களிலும், வின்ஸ் 2 ஓட்டங்களிலும் ஹேசல்வுட்டின் அபார பந்துவீச்சில் ஆட்ட மிழந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், இங்கிலாந்து 2 விக்கெட் இழப்புக்கு 33 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஸ்டோன்மேன் 19 ஓட்டங்களுடனும், ஜோ ஷரூட் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (அ)





# அதிரடியான ஆட்டத்தால் கிண்ணம் ஆவரங்கால் இந்துவுக்கு

யாழ்ப்பாணம்,நவ.26

ஜெனகனின் அதிரடியும் நிதர்சியின் துல்லியமான தடுப்பும் கைகொடுக்க கடும் போராட்டத்தின் பின் ஆவரங்கால் மத்தியை 3:1 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காமாட்சி அம்பாளின் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம்.

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம், யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்ட இந்தச்சுற்றுப்போட்டியில் முதல் இரு செற்களையும் 25:17 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் இந்து இளைஞர் அணி தனதாக்கியது.தொடர்ந்து மூன்றாவது செற்றை 34:32 என மத்தி கைப்பற்றியது.

இருந்தபோதும் அடுத்த செற்றில் ஆக்ரோஷத்துடன் விளையாடிய இந்து இளைஞர் அணி 25:19 என்ற புள்ளிகளைப்பெற்று 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக இந்து இளைஞரின் ஜெனகன் தெரிவு செய்யப்பட்டார்.

(அ-66)

# அச்சுவேலி கலைமகள் அசத்தியது கரப்பந்தில்



யாழ்ப்பாணம், நவ.26

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக 'பி' பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகம்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகமும் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்ட இந்தச்சுற்றுப்போட்டியில் முதல் செற்றை 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கலைமகள் அணி வெற்றியீட்டியது .தொடர்ந்த இரண்டாவது செற்றை 25:23 என என வளர்மதி கைப்பற்றி ஆட்டத்தைச் சமப்படுத்தியது.

இருந்தபோதும் அடுத்த இரு செற்றிலும் ஆக்ரோசத்துடன் விளையாடிய கலைமகள் அணி அணி 25:16 ,25: 14 என்ற புள்ளிகளைப்பெற்று 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக கலைமகளின் கௌசிகனும், தொடர் ஆட்டநாயகனாக வளர்மதியின் நிமோசனும் தெரிவு செய்யப்பட்டனர் . (அ-66)

# மரண அறிவித்தல்

## திருமதி பாரதி மாலசுதன் (பரா)

(ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)



வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாரதி மாலசுதன் (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) கடந்த (23.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், சிவபாலன்–புஸ்பமாலா தம்பதியரின் மருமகளும், மாலசுதனின் (லண்டன்) பாச மனைவியும், சுருதிகா (மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி), சுருஜன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரும் அன்புத் தாயாரும், ரேவதி( லண்டன்), முகுந்தன் (அதிபர், யா/சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலை), முகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருகரன்(லண்டன்), அருந்ததி (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), கஜேந்தினி(லண்டன்), ஜனகன் (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்), பாலசுவர்ணா (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு றோட், வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

# முரளி, புஜாரா கலக்கல் இலங்கை பரிதாபம்

நாக்பூர், நவ.26

இலங்கைக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர்கள் முரளி விஜயம், புஜாராவும் சதமடிக்க, இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது.

நாக்பூரில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி ஓட்டங்களைக் குவித்து இலங்கை அணிக்கு அழுத்தமளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையின் நேர்த்தியான பந்து வீச்சால் விஜய்யும் புஜாராவும் ரன்கள் குவிக்கச் சிரமப்பட்டார்கள். ஆயினும் மிகவும் நிதானமாக ரன்கள் சேர்த்து இலங்கை அணியின் திட்டங்களைத் தோல்வியடையச் செய்தார்கள்.

விஜய்யும் புஜாராவும் இரண்டாவது விக்கெட்டுக்கு 209 ஓட்டங்களைச் சேர்த்து இந்திய அணிக்கு வலுவான தொடக்கத்தை அளித்தார்கள். பின்னர் 128 ஓட்டங்களை எடுத்திருந்த முரளி விஜய், ஹேரத்தின் சுழலில் வீழ்ந்தார். அதனையடுத்து விராட் கோஹ்லி களமிறங்கியபிறகு ஆட்டம் சுறுசுறுப்படைந்தது. புஜாரா 246 பந்துகளில் சதமெடுத்தார். இது அவருடைய 14-வது டெஸ்ட் சதமாகும். புஜாரா - கோலி கூட்டணி 70 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்தது. புஜாராவின் சதத்துக்குப் பிறகு விராட் கோலி விரைவாக ரன்கள் சேர்த்து 66 பந்துகளில் அரைச் சதமெடுத்தார்.

2 ஆம் நாளின் முடிவில் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 312 ரன்கள் எடுத்து வலுவான நிலையில் உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 26.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.